*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 519/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.கவின் த/பெ. வெங்கடாஜலம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.11.2025.**

துவக்க நேரம் 12.07 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது 74 கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து, காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் மற்றும் நன்கு பழக்கமானவர்கள் என்று சொன்னால் சரிதான். கடந்த 28.09.2023 ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் நானும், சுதாகர் என்பவரும் சொந்த வேலையாக தண்ணீர்பந்தலுக்கு சென்றுவிட்டு, திரும்பி எங்கள் ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் அருகில் சென்றுகொண்டிருந்தபொழுது, ராஜா என்பவர் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபொழுது, ராமர், அவருடைய மகன் ஜெயக்குமார், சக்தி (எ) சக்திவேல் ஆகிய மூவரும் ராஜாவை

வழிமறித்து, கெட்ட வார்த்தையால் திட்டி, ஜெய்குமார் என்பவர் அவரது கையில் வைத்திருந்த கத்தியால், ராஜாவின் நடுமண்டையில் வெட்டினார் என்றும், உடனே ராமர், ராஜாவின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொள்ள சக்திவேல் அவரது கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் ராஜாவின் இடது முழங்கையில் அடித்தார் என்றும், பின்னர் எதிரிகள் மூவரும் சேர்ந்து ராஜாவின் பைக்கை அடித்து சேதப்படுத்தி, ராஜாவிற்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.16 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.07 17:24:54 +0530

Judicial Magistrate No.2, Attur.